# BSNL ஊழியர் சங்கம்

## தமிழ் மாநிலம்

**சுற்றறிக்கை எண்:152** **தேதி:-27.02.2017**

**ஊதிய மாற்றமும் இதர பிரச்சனைகளும்**

அன்பார்ந்த தோழர்களே,

3rd PRCயின் அறிக்கை அரசாங்கத்திடம் வழங்கப்பட்டு விட்டது. அரசாங்கமும் அதனை சம்பந்தப்பட்ட இலாகா செயலாளர்களுக்கு அதனை அனுப்பியுள்ளது. 3rd PRC நிர்ணயித்துள்ள வரைமுறைகளின் படி BSNL ஊழியர்களுக்கு ஊதிய மாற்றம் நடைபெறுவது சிரமம் என்று நம்பகமான வட்டாரங்களில் இருந்து வரும் செய்திகள் கூறுகின்றன. எனவே அடுத்த ஊதிய மாற்றத்தில் நமக்கு கிடைக்க வேண்டிய நியாயத்தை பெறுவதற்கு ஊழியர்களும் அதிகாரிகளும் போராட்டத்திற்கு தயாராக வேண்டும்.

**ஒரு அரசுத்துறை நிறுவனமும், 4 தனியார் நிறுவனங்களும் பொருத்தமானது என DOT செயலாளர் J.S.தீபக்:-** ரிலையன்ஸ் ஜியோவின் வருகைக்கு பின் தனியார் நிறுவனங்கள் ஒன்றிணைவது நடைபெறத் துவங்கியுள்ளது. வோடோபோன் IDEAவுடன் இணைகிறது. டெலினார் நிறுவனத்தை ஏர்டெல் ஸ்வீகரித்து விட்டது. அனில் அம்பானியின் ரிலையன்ஸும் ஏர்செல்லும் இணைவதற்கான நடவடிக்கைகள் துவங்கி விட்டன. டாடா டெலிசெர்வீசஸ் மற்றும் MTS ஆகிய நிறுவனங்கள் ரிலையன்ஸ் கம்யூனிகேஷன்ஸுடன் இணைவதற்கான அறிகுறிகள் தென்படுகின்றன. இந்த சூழ்நிலையில் இந்திய தொலை தொடர்பு சந்தையில், நான்கு தனியார் நிறுவனங்களும், ஒரு அரசுத்துறை நிறுவனமும் இருப்பதுதான் பொருத்தமாக இருக்கும் என DOT செயலாளர் திரு J.S.தீபக் PTI நிறுவனத்திடம் தெரிவித்துள்ளார்.

**தேசியக் கவுன்சில் கூட்டத்தின் தேதியை உடனடியாக அறிவிக்க வேண்டும்:-** 35ஆவது தேசிய கவுன்சில் கூட்டத்திற்கான தேதியை கார்ப்பரேட் அலுவலகம் இறுதி செய்ய வேண்டும். BSNL ஊழியர் சங்கத்தின் பொது செயலாளர் தோழர் P.அபிமன்யு கார்ப்பரேட் அலுவலகத்தில் உள்ள GM(SR) திரு A.M.குப்தா அவர்களை 27.02.2017 அன்று சந்தித்து மார்ச் இரண்டாவது வாரத்தில் தேசியக் கவுன்சில் கூட்டம் நடைபெற வேண்டும் என கடுமையாக வற்புறுத்தி உள்ளார். மேலும் கால தாமதமின்றி தேசியக் கவுன்சில் தேதியை இறுதி செய்வதாக அவர் உறுதி அளித்துள்ளார்.

**ஆட்சியர் / கவர்னர் மாளிகை நோக்கி பேரணிக்கான அறிவிப்பு வழங்கப்பட்டது:-** BSNL நிறுவனத்தில் பங்கு விற்பனை செய்வது அல்லது கேந்திர பங்குதாரரை அனுமதிப்பது என்கிற நிதி ஆயோக்கின் பரிந்துரைகளை எதிர்த்தும், துணை டவர் நிறுவனம் அமைப்பதை எதிர்த்தும், BSNL நிறுவனத்திற்கு இலவசமாக 4Gஸ்பெக்ட்ரம் வழங்க வேண்டும் என வலியுறுத்தியும், ரிலையன்ஸ் ஜியோ நிறுவனத்திற்கு அரசாங்கம் செய்து வரும் சாதகங்களை எதிர்த்தும் மார்ச் 9ஆம் தேதி அனைத்து மாவட்ட ஆட்சியர்/ கவர்னர் மாளிகை நோக்கி பேரணி நடத்துவது என BSNLல் உள்ள அனைத்து சங்கங்கள் எடுத்த முடிவிற்கான அறிவிப்பை 27.02.2017 அன்று DOT செயலரிடம் வழங்கப்பட்டது.

BSNL ஊழியர் சங்கத்தின் மாவட்ட சங்கங்கள் இதர மாவட்ட சங்கங்களை அணுகி, இதற்கான தயாரிப்பு பணிகளை உடனடியாக துவங்கிட வேண்டும்.

வாழ்த்துக்களுடன்,

தோழமையுடன்,

**(A.பாபு ராதாகிருஷ்ணன்)**
**மாநில செயலாளர்**